<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

வா.சா. 1 தேதி.04.01.2025

| OS.No. | 133/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | குலசேகரன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களாக 15.07.2008 தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த பகுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 23.02.2020 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 03.01.2013 தேதியிட்ட அ பதிவேடு விவரம் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 03.01.2023 தேதியிட்ட நில வரைபடம் வா.சா.ஆ.4 ஆகவும், 23.02.2020 தேதியிட்ட மணல்மேடு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா மற்றும் அடங்கல் நகல் வா.சா.ஆ.5 ஆகவும், பிரிவு 78ன் கீழ் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்படி அளித்த விண்ணப்பத்தின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 01.04.2022 தேதியிட்ட வாதி இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையருக்கு அளித்த கடிதத்தின் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 30.03.2022 தேதியிட்ட வாதி கோவிலின் தீர்மானத்தின் உண்மை நகல் வா.சா.ஆ.8 ஆகவும், இதர ரசீதுகளின் உண்மை நகல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.